# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 04 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி**

(2015.12.04 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)


# பௌத்த அறநிலையங்கள் (திருத்தம்)

**(318 ஆம் அத்தியாயமான) பௌத்த அறநிலையங்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

புத்தசாசன அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 28.00 தபாற் செலவு : ரூபா 20.00

### *சட்டப்பயன் பற்றிய கூற்று*

***வாசகம் 2*** : *இவ்வாசகம், பல்வேறு புதிய சொல்லமைப்புகளுக்கு வரைவிலக்கணங்கள் கூறுவதன்மூலமும் ஏலவேயுள்ள சில சொல்லமைப்புகள் தொடர்பாக ஏற்புடைமைப் பரப்பெல்லையை விசாலிப்பதன்மூலமும், (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (318 ஆம் அத்தியாயமான) பௌத்த அறநிலையங்கள் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.*

***வாசகம் 3*** : *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, கட்டளைச்சட்டத்தின் கீழான விலக்களிப்பைப் பொருட்படுத்தாது, ஒவ்வொரு கோயிலையும் தேவாலயத்தையும் கோவிலையும் பதிவுசெய்வதற்கானதாகும்.*

***வாசகம் 4*** : *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவை மாற்றீடு செய்கின்றதுடன், புதிய பிரிவின் சட்டப்பயனானது, ஆணையாளர் தலைமையதிபதியின் தத்துவங்களைக் குறித்துரைப்பதற்கானதாகும்.*

***வாசகம் 5*** : *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை நீக்குகின்றதென்பதுடன், இது 5 ஆம் பிரிவுக்கு செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையுடையதுமாகும்.*

***வாசகம் 6*** : *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, மஹாநாயக்க தேரர்களின் கலந்தாலோசனையுடன் நம்பிக்கைப்பொறுப்பாண்மையை வைத்திருப்பதற்கும், புதிய தியவதனநிலமே ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கான கூட்டமொன்றிற்கு அழைக்கப்படுவதற்கு தகவுடைய உறுப்பினர்களின் கூட்டை மாற்றுவதற்கும், மற்றும் சூழ்நிலைகளைப் பொறுத்து அத்தகைய கூட்டத்துக்காக அழைக்கப்படுவதற்கான காலப்பகுதியை வேறுபடுத்துவதற்கும் தியவதன நிலமேயை இயலச்செய்வதற்குமானதாகும்.*

***வாசகம் 7*** : *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 7அ என்னும் புதிய பிரிவொன்றை உட்புகுத்துகின்றதென்பதுடன், இப் புதிய பிரிவின் சட்டப்பயனானது, தியவதன நிலமே என்ற பதவியை வகிக்கையில் பஸ்நாயக்க நிலமே என்ற பதவியை தியவதன நிலமே ஒருவர் வகிப்பதைத் தடுப்பதற்கானதாகும்.*

***வாசகம் 8*** : *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறாக அப்பிரிவின் சட்டப்பயனானது, ஒரு பஸ்நாயக்க நிலமேயைத் தேர்ந்தெடுப்பதற்கான கூட்டத்துக்கு வருகைதருகின்ற உறுப்பினர்களின் கூட்டை மாற்றுவதற்கானதாகும்.*

***வாசகம் 9*** : *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 8அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றதென்பதுடன், புதிய பிரிவின் சட்டப்பயனானது, ஒரு தேவாலயத்தின் பஸ்நாயக்க நிலமே ஒருவர் வேறொரு தேவாலயத்தின் பஸ்நாயக்க நிலமே என்ற பதவியை வகிப்பதனைத் தடுப்பதற்கானதாகும்.*

***வாசகம் 10*** : *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறாக அப்பிரிவின் சட்டப்பயனானது, மல்வத்த விஹாரை பற்றிய குறிப்பீட்டை மல்வத்து மற்றும் அஸ்கிரிய மதப்பிரிவுகளென மாற்றுவதற்கானதாகும்.*

***வாசகம் 11*** : *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 12ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, தியவதன நிலமேயொருவரின் பதவிக்கால எல்லையை வரையறுப்பதற்கானதாகும்.*

***வாசகம் 12*** : *இவ்வாசகம், 1981 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டத்தின் 3 ஆம் பிரிவை நீக்குகின்றது ; இது முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையுடையதாகும்.*

**வாசகம் 13 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, குற்றப்பணத்தொகையை அதிகரிப்பதற்கானதாகும்.

**வாசகம் 14 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, ஒரு நம்பிக்கைப்பொறுப்பாளராகவிருப்பதற்குத் தகவுடையவராகவிருப்பதற்கான தகைமைகளை வேறுபடுத்துவதற்கானதாகும்.

**வாசகம் 15 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, அப்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளில் தியவதன நிலமேயை அகற்றுவதற்கு ஆணையாளர் தலைமமையதிபதியை இயலச்செய்வதற்கானதாகும்.

**வாசகம் 16 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறாக அப்பிரிவின் சட்டப்பயனானது, தியவதன நிலமேயின் பதவியில் வெற்றிடமொன்று இருக்கின்றபோது, சத்தர மஹா தேவாலயத்தின் பஸ்நாயக்க நிலமே ஒருவரை தியவதன நிலமேயின் இடத்தில் செயலாற்றுவதற்குத் தகவுடையவராகவாக்குவதற்கானதாகும்.

**வாசகம் 17 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, குறித்தசில சூழ்நிலைகளில் ஒரு நிரந்தரமான நம்பிக்கைப்பொறுப்பாளரின் எல்லாத் தத்துவங்களுடனும்கூடிய தற்காலிக நம்பிக்கைப்பொறுப் பாளர்களை நியமிப்பதற்கு ஆணையாளர் தலைமையதிபதியை இயலச்செய்வதற்கானதாகும்.

**வாசகம் 18 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, குற்றப்பணத்தொகையை அதிகரிப்பதற்கானதாகும்.

**வாசகம் 19 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 20அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றதென்பதுடன், உட்புகுத்தப்பட்ட புதிய பிரிவின் சட்டப்பயனானது, விஹாராதிபதி பதவியை வகித்தவரான அத்தகைய விஹாராதிபதி அல்லது கட்டுப்படுத்துகின்ற விஹாராதிபதி, காரக்க சங்க சபையின் செயற்குழுவினால் செய்யப்பட்ட முடிபொன்றின் நியதிகளின்படி கோயில் ஆதனத்தை வறிதாக்கும்போது, புதிதாக நியமிக்கப்பட்ட ஒரு விஹாராதிபதிக்கு அல்லது கட்டுப்படுத்துகின்ற விஹாராதிபதிக்கு அத்தகைய எல்லா ஆதனத்தையும் உரித்தாகுவதற்கானதாகும்.

**வாசகம் 20 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவை மாற்றீடுசெய்கின்ற தென்பதுடன், புதிய பிரிவின் சட்டப்பயனானது, பிக்கு ஒருவர் கொள்ளுகின்ற எல்லாத் தனிப்பட்ட ஆதனங்களும், குறித்தசில சூழ்நிலைகளில் தவிர, கோயில் ஆதனங்களாகக் கருதப்படுவதற்கானதாகும்.

**வாசகம் 21 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, குற்றப்பணத்தொகையை அதிகரிப்பதற்கானதாகும்.

**வாசகம் 22 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 27 ஆம் பிரிவை மாற்றீடு செய்கின்றதென் பதுடன், மாற்றீடுசெய்யப்பட்ட பிரிவின் சட்டப்பயனானது, பரவெனி ஆதனத்தின் உரிமைகளைக் கைமாற்றும்போது பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையைக் குறித்துரைப்பதற்கானதாகும்.

**வாசகம் 23 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 28அ முதல் 28ஓ வரையிலான புதிய பிரிவுகளை உட்புகுத்துகின்றதென்பதுடன், அப்பிரிவுகளின் சட்டப்பயனானது, அதிகாரமளிக்கப்படாத உடைமை கொண்டிருப்பவரிடமிருந்து அல்லது இருப்பாட்சி கொண்டிருப்பவரிடமிருந்து கோயில் ஆதனத்தை மீட்டெடுப்பதற்கான முறையையும் நடவடிக்கைமுறையையும் குறித்துரைப்பதற்கானதாகும்.

**வாசகம் 24 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, குற்றப்பணத்தொகையை அதிகரிப்பதற்கும் மற்றும் ஒரு குத்தகையில் உட்புகுத்தப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட பொருத்தனைகளைக் குறித்துரைப் பதற்குமானதாகும்.

**வாசகம் 25 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, குற்றப்பணத்தொகையை அதிகரிப்பதற்கானதாகும்.

**வாசகம் 26 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம்பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, குற்றப்பணத்தொகையை அதிகரிப்பதற்கானதாகும்.

**வாசகம் 27 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம்பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, குற்றப்பணத்தொகையை அதிகரிப்பதற்கானதாகும்.

**வாசகம் 28 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, அட்டமஸ்தானக் குழுவின் உறுப்பினரொருவராகவிருப்பதற்கான பொதுத் தகைமைகளைக் குறித்துரைப்பதற்கானதாகும்.

**வாசகம் 29 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, ஆணையாளர் தலைமையதிபதிக்குப் படிவங்களை அனுப்புவதற்கான காலப்பகுதியை நீடிப்பதற்கும் மற்றும் அப்பிரிவின்கீழ் மஹாநாயக்க தேரர்களின்மீது சுமத்தப்பட்ட கடமையை அகற்றுவதற்குமானதாகும்.

**வாசகம் 30 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, குற்றப்பணத்தொகையை அதிகரிப்பதற்கானதாகும்.

**வாசகம் 31 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, எந்தப் புதிய துறைகள் தொடர்பாக ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமோ, அந்தப் புதிய துறைகளையும் மற்றும் அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கெனப் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையையும் குறித்துரைப்பதற்கானதாகும்.

**வாசகம் 32 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 43அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றதென்பதுடன், உட்புகுத்தப்பட்ட பிரிவின் சட்டப்பயனானது ஒழுங்குவிதிகளுக்கு அமைந்தவராகவுள்ள எவரேனுமாளின்மீது 43 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுவதற்கான கடமையொன்றைச் சுமத்துவதற்கானதாகும்.

ச.வ.-ஓ. 20/2014

## (318 ஆம் அத்தியாயமான) பௌத்த அறநிலையங்கள் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயரும், நடைமுறைக்கு வரும் தேதியும்.*

**1.** (1) இச்சட்டம், 2015 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இச்சட்டத்தின் 23 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தில் உட்புகுத்தப்பட்ட 28அ தொடக்கம் 28ஓ வரையிலான புதிய பிரிவுகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

*(318 ஆம் அத்தியாயமான) பௌத்த அறநிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** (இச்சட்டத்தில் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (318 ஆம் அத்தியாயமான) பௌத்த அறநிலையங்கள் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) ''பிக்கு'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்துக்கு நேர்முன்னர் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :-

" "அட்டமஸ்தான" என்பது, அநுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள ஸ்ரீ மஹாபோதிய, ருவன் வெலிசாய, ஜேத்தவணராமய, அபயகிரிய, தூபாராமய, மிரிஸ்ஸவெட்டிய, லங்காராமய மற்றும் லோவமஹாபாய என்று பொருளாகும்;";

2-PL 009405 - 425 (2015/11)

(2) ''பிக்கு'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக் கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :-

" "பிக்கு" என்பது, ஏற்றுக்கொள்ளப்பட்ட தேரவாதப் பாரம்பரியங்களுக்கிணங்கச் சமயப்பணியில் அமர்த்தப்பட்ட உப சம்பதவாகவிருப்பினுஞ்சரி அல்லது சமனேரவாகவிருப்பினுஞ்சரி, வணக்கத்துக்குரிய பிக்கு ஒருவர் என்று பொருளாகும்;";

(3) "பௌத்த அலுவல்கள் ஆணையாளர் தலைமையதிபதி" என்னும் சொல்லமைப்பை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

'' ''கட்டுப்படுத்துகின்ற விஹாராதிகாரி'' என்பது, இயைபான கோயிலின் விஹாராதிபதியினால் அல்லது இயைபான கோயிலின் விஹாராதிபதி இயைபான நிக்காயவின் அல்லது மதப்பிரிவின் அதிவணக்கத்துக்குரிய மஹாநாயக்க தேரராக வுள்ளவிடத்து அத்தகைய மஹாநாயக்க தேரரினால், விடயத்துக்கேற்ப, விஹாராதிபதியின் அல்லது அதிவணக்கத்துக்குரிய மஹாநாயக்க தேரரின் சம்மதம் உளதாயிருக்கும்வரை, இயைபான கோவிலின் நிருவாகத்துக்காகத் தத்துவமளிக்கப்பட்ட எவரேனும் பிக்கு என்று பொருளாகும்;";

(4) ''நீதிமன்றம்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக் கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :-

" ''கண்டிய மாகாணங்கள்'' என்பது, 1952 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, கண்டியத் திருமணங்கள் மற்றும் மணநீக்கச் சட்டத்துக்கான முதலாம், இரண்டாம் அட்டவணைகளில் குறித்துரைக்கப்பட்ட இடப் பரப்புக்கள் என்று பொருளாகுமென்பதுடன், மொறவக்க கோறளை மற்றும் ஹினிதும பத்து பிரதேசச் செயலாளர் பிரிவையும் உள்ளடக்கும்;";

(5) ''பரவெனிப் பங்கு'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரை விலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :-

" ''மரபுவழிக் குடிவாரக்காரர்'' என்பது, கோயிலுக்கு அல்லது நிந்தகம் உரிமையாளருக்குக் குறித்த சில சேவைகளைப் புரிவதற்கமைவாக ஒரு பரவெனிப்பங்கை இடையறாது வைத்திருப் பவர் என்று பொருளாதல் வேண்டும்;";

(6) "கோயில்" என்னும் வரைவிலக்கணத்துக்கு நேர்முன்னர் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

"சொலொமஸ்தான" என்பது, பொலன்னறுவை நிருவாக மாவட்டத்தில் அமைந்துள்ள உத்தரராமய மறுபெயர்கள் கல்விஹாரய, தெமல மஹாசாய, கிரிவெஹெர, ஜேத்தாவணராமய மறுபெயர்கள் திவங்க பிலிமகெய, லங்கா திலக்கய, ரங்கொத் வெஹெர மறுபெயர் ரத்னமாலி தூபய, வட்டதாகெயவுடன் தலதா மலுவ, தூபராமய, அலஹன பிரிவேனை, பத்த சீமாவ, நய்பென விஹாரை, மணிக்வெஹெர, பபலு வெஹெர, பொத்குல் விஹாரை, தொப்பவெவ டாகபா மற்றும் மெதிரிகிரிய வட்டதாகெய என்று பொருளாகும்;";

(7) ''கோயில்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக் கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :-

" "கோயில்" என்பது, ஏதேனும் விஹாரை, டாகபா, பிக்கு அவாச, இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தும், இக்கட்டளைச்சட்டத்தின் நிருவாகம் மற்றும் முகாமையின்கீழ் உள்ளதுமான தேரவாதப் பாரம்பரியத்தின் ஏதேனும் பௌத்த வழிபாட்டிடம் என்று பொருளாகுமென்பதுடன்,

கண்டி ஸ்ரீ தலதா மாளிகை, அனுராதபுர நிருவாக மாவட்டத்தினுள் அமைந்துள்ள ஸ்ரீபாதஸ்தான, அட்டமஸ்தான மற்றும் பொலன்னறுவை நிருவாக மாவட்டத்தினுள் அமைந்துள்ள சொலொஸ்மஸ்தான அத்துடன் இக்கட்டளைச் சட்டத்தின் 4(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி நிருவகிக் கப்பட்ட ஏதேனும் தேவாலயம் என்பவற்றையும் உள்ளடக்கும்;";

கோயில் என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

(8) ''கோயில் காணி'' என்பது, பின்வருவன என்று பொருளாகும் :-

(அ) இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் ஏதேனும் கோயிலின் பயன்பாட்டுக்காகக் குறித்தொதுக்கப்பட்டதும், ஏதேனும் நீதிமன்றம், சன்னஸ், உறுதிகள் அல்லது வேறெவையேனும் வழிவகைகள்மூலம் செய் யப்பட்ட தீர்மானமொன்றின் நியதிகளின்படி அத்தகைய கோயிலுக்கு உரித்தாகவருகின்றது மான ஏதேனும் காணி;

(ஆ) ஒரு பிக்கு இறப்பதன் அல்லது மதம்சார் ஆடை துறப்பதன் காரணமாக ஒரு பௌத்தக் கோயிலினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட ஏதேனும் காணி;

(இ) ஏதேனும் காணியின் நீண்டகால ஆட்சி காரணமாக ஒரு கோயிலினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அத்தகைய காணி; அத்துடன்

(ஈ) ஏதேனும் கோயிலுக்குக் கொடைமுனையப்பட்ட ஏதேனும் காணி.

(9) ''விஹாராதிபதி'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்:-

'' ''விஹாராதிபதித் தேரர்'' என்பது, இயைபான நிக்காயவின் அல்லது மதப்பிரிவின்

பாரம்பரியங்களுக்கிணங்க, தேவாலயம் தவிர்ந்த கோயிலின் ஒன்றின் விஹாராதிபதியாக வருவதற்கு உரித்துள்ள அத்தகைய கோயிலின் பிரதான பதவி வகிப்பவர் அல்லது அத்தகைய பாரம்பரிய உரித்துடைமை கிடைக்கக்கூடியதாகவிராதவிடத்து, இயைபான நிக்காயக்களின் அல்லது மதப்பிரிவுகளின் மஹாநாயக்க தேரரினால் விஹாராதிபதியாக நியமிக்கப்பட்ட பிக்கு ஒருவர் என்று பொருளாகுமென்பதுடன், ஸ்ரீ தலதா மாளிகை தொடர்பாக “விஹாராதிபதி” என்பது, மஹா விஹார வன்ச சியமோபாலி மஹா நிக்காயவின் மல்வத்து மற்றும் அஸ்கிரிய மதப்பிரிவுகளின் இரு அதிவணக்கத்துக்குரிய பிரதான பதவிவகிப்போர் என்றும் பொருளாகும்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவை மீள இடுதல்.*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்படுவதுடன் அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்பட்டு பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

“3. (1) இக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் இலங்கையிலுள்ள ஒவ்வொரு கோயிலுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் ஒரு கட்டளையின்மூலம், ஸ்ரீ தலதா மாளிகை, ஸ்ரீபாதஸ்தான, அட்டமஸ்தான மற்றும் சொலொமஸ்தான தவிர்ந்த வேறு ஏதேனும் கோயிலுக்கு இக்கட்டளைச் சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளினதும் அல்லது அவற்றுள் எவற்றினதும் ஏற்புடைமையிலிருந்து விலக்களிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்பு எவ்வாறிருப்பினும், இலங்கையின் ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தினுள்ளும் அமைந்துள்ள ஒவ்வொரு பௌத்த கோயிலும், தேவாலயமும், கோவிலும், பௌத்த அலுவல்கள் திணைக்களத்துடன் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.

(3) இயைபான கோயிலின் விஹாராதிபதி, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய கோயிலைப் பதிவுசெய்கின்ற நோக்கத்துக்காகத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாத் தகவல்களையும் இயைபான மதப்பிரிவின் அல்லது நிக்காயவின் மஹாநாயக்க தேரரினூடாகப் பதிவாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதல் வேண்டும்.

(4) ஆணையாளர் தலைமையதிபதி, அத்தகைய ஒவ்வொரு மதப்பிரிவினதும் அல்லது நிக்காயவினதும் மஹாநாயக்க தேரர்களின் அங்கீகாரத்தினது அடிப்படையில் கோயிலைப் பதிவுசெய்தல் வேண்டும்.

(5) இரண்டாம் உட்பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்டதன்மேல், ஆணையாளர் தலைமையதிபதி, அத்தகைய பதிவை உறுதிப்படுத்துகின்ற சான்றிதழொன்றை அத்தகைய ஒவ்வொரு பௌத்த கோயிலினதும் விஹாராதிபதி ஒவ்வொருவருக்கும் வழங்குதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :-

"ஆணையாளர் தலைமை யதிபதியின் தத்துவங்கள்.

5. நம்பிக்கைப்பொறுப்பாளர், விஹாராதிபதி ஒவ்வொருவரும் மற்றும் கட்டுப்படுத்துகின்ற விஹாராதிபதி ஒவ்வொருவரும் இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளினால் அதிகாரமளிக்கப்பட்ட அளவிற்கு ஆணையாளர் தலைமையதிபதியின் பொதுவான மேற்பார்வைக்கு அமைந்தவராதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை நீக்கிவிடுதல்.

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) ஓராம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(1) தியவதன நிலமே, கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் நம்பிக்கைப்பொறுப்பாண்மையை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன், அவர் தமது கடமைகளை நிறைவேற்றுகையில் மல்வத்து மற்றும் அஸ்கிரிய மதப்பிரிவுகளின் மஹாநாயக்க தேரர்களைக் கலந்தாலோசித்தலும் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(2)(அ) தியவதன நிலமேயின் பதவியில் வெற்றிடமொன்று ஏற்படும்போதெல்லாம் ஆணையாளர் தலைமையதிபதி, ஒரு கூட்டத்துக்காக நிர்ணயிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குக் குறையாத காலப்பகுதிக்கு முன்னர் பின்வருவோரை, அத்தகைய ஆள் ஒவ்வொருவரும் கடைசியாக வசித்ததாக அறியப்பட்ட இடத்துக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட எழுத்திலான அறிவித்தலின்மூலம், கண்டியில் அக்கூட்டத்துக்கு அழைத்தல் வேண்டும்:-

(i) மல்வத்து மற்றும் அஸ்கிரிய மதப்பிரிவுகளின் மஹாநாயக்க தேரர்கள் உள்ளடங்கலாக மல்வத்து மற்றும் அஸ்கிரிய மதப்பிரிவுகளின் இருவின்ஷத்வர்கிக காரக்க மஹா சங்க சபைகளின் உறுப்பினர்களாகவுள்ள எல்லாப் பிக்குமாரையும்:

ஆயின், இரு வின்ஷாத் வர்கிக காரக்க சங்க சபைகளின் சங்க சபையின் அமைப்பிலான ஏதேனும் வெற்றிடம் இப்பிரிவின் கீழ் எடுக்கப்பட்ட முடிவைப் பாதித்தலாகாது;

(ii) கண்டி ஸ்ரீ தலதா மாளிகையுடன் சம்பந்தப்பட்ட சத்தர மஹா தேவாலயங்களின் பஸ்நாயக்க நிலமேக்கள்; அத்துடன்

(iii) கண்டி நிருவாக மாவட்டத்தின் பிரிவுச் செயலாளர் பதவியை வகிக்கின்றவரான ஆள்.

(ஆ) அஞ்சல் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டொன்று பதிவஞ்சல்மூலம் அறிவித்தமைக்கு முதற்றோற்றச் சான்றாதல் வேண்டும்;

(இ) பதவிக்காலம் பூர்த்தியாவதன்மேல் தியவதன நிலமேயின் பதவியில் வெற்றிடமொன்று ஏற்படுவதன்மீது ஆணையாளர் தலைமையதிபதி, அத்தகைய சம்பவம் ஏற்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் அல்லது அத்தகைய வெற்றிடம் வேறேதேனும் காரணத்தின் விளைவாக ஏற்படுமிடத்து அத்தகைய வெற்றிடம் ஏற்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவுறுவதற்கு முன்னர், இவ்வுட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய கூட்டத்தை நடாத்துதல் வேண்டும்.”.

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 7அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

முதன்மைச் சட்டவாக்கத்தில் 7அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

"தியவதன நிலமேயாக நியமிக்கப்பட்டவரான ஆளெவரும், அத்தகைய பதவியை வகித்துக் கொண்டிருக்கையில், தேவாலயமொன்றின் பஸ்நாயக்க நிலமேயின் பதவியை வகித்தலாகாது

7அ. கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் தியவதன நிலமேயாக நியமிக்கப்பட்டவரான ஆளெவரும், தியவதன நிலமேயின் பதவியை வகித்துக் கொண்டிருக்கும்போது தேவாலயமொன்றின் பஸ்நாயக்க நிலமேயின் பதவியை வகித்தலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(2)(அ) பஸ்நாயக்க நிலமே ஒருவரின் பதவியில் வெற்றிடமொன்று ஏற்படும்போதெல்லாம், ஆணையாளர் தலைமையதிபதி, அத்தகைய தேவாலயம் எந்த நிருவாக மாவட்டத்தினுள் அமைந்துள்ளதோ அந்த நிருவாக மாவட்டத்தினுள்ளானவோர் இடத்தில் பின்வரும் ஆட்களைக் கூட்டமொன்றுக்கு அழைத்தல் வேண்டும்:-

(i) அத்தகைய தேவாலயம் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அந்த மாவட்டத்தில் பிரதேசச் செயலாளர் பதவியை அப்போதைக்கு வகிக்கின்ற ஆட்கள்;

(ii) இக்கட்டளைச்சட்டத்தின் 4(1) ஆம் பிரிவின்கீழ் தேவாலயம் எந்த நிருவாக மாவட்டத்தில் அமைந்துள்ளதோ மற்றும் நிருவகிக்கப்படுகின்றதோ அந்த நிருவாக மாவட்டத்திலுள்ள தேவாலயத்தின் பஸ்நாயக்க நிலமேக்கள் மற்றும் கண்டி நிருவாக மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு தேவாலயத்தின் விடயத்தில் தியவதன நிலமே;

(iii) இக்கட்டளைச்சட்டத்தின் *4(1)* ஆம் பிரிவின் கீழ் இயைபான தேவாலயம் எந்த நிருவாக மாவட்டத்தில் அமைந்துள்ளதோ மற்றும் நிருவகிக்கப்படுகின்றதோ அந்த நிருவாக மாவட்டத்தில் அமைந்துள்ள எல்லாத் தேவாலயங்களினதும் நம்பிக்கைப்பொறுப் பாளர்கள்;

(iv) கண்டி மாவட்டத்தினுள் அமைந்துள்ள சத்தர மஹாதேவாலயம் தொடர்பாக மல்வத்து மற்றும் அஸ்கிரிய மதப்பிரிவுகளின் மஹாநாயக்க தேரர்கள் மற்றும் இவ்வுட் பிரிவின் பந்திகள் (i), (ii) மற்றும் (iii) என்ப வற்றில் குறித்துரைக்கப்பட்ட ஆட்கள் உட்பட, மல்வத்து மற்றும் அஸ்கிரிய மதப்பிரிவுகளின் வின்ஷாத் வர்கிக காரக்க மஹா சங்க சபை யின் உறுப்பினர்களாகவுள்ள பிக்குமார்;

(v) கண்டி மாகாணத்தில் அமைந்திராத ஒரு தேவாலயத்தின் விடயத்தில், இவ்வுட்பிரிவின் (i), (ii), (iii) ஆகிய பந்திகளில் குறித்துரைக் கப்பட்ட இயைபான ஆட்கள் மற்றும் அத்த கைய தேவாலயம் எந்த மாவட்டத்தினுள் அமைந்துள்ளதோ அந்த மாவட்டத்தின் பிரதேசச் செயலாளர் பிரிவில் அமைந்துள்ள பௌத்த கோயில்களின் விஹாராதிபதிகள்;

(ஆ) இப்பிரிவின் (அ) என்னும் பந்தியிற் குறித்துரைக்கப் பட்ட ஒவ்வோர் ஆளுக்கும், சொல்லப்பட்ட கூட்டத்துக் காக நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் ஒரு மாதத் துக்குப் பிந்தாமல், அத்தகைய ஆள் கடைசியாக வசித்ததாக அறியப்பட்ட இடத்துக்கு முகவரியிடப் பட்ட எழுத்திலான அறிவித்தல் ஒன்று பதிவஞ் சலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

(இ) அஞ்சல் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு பதிவஞ்சல் மூலமான அறிவித் தலுக்கான முதற்றோற்றச் சான்றாதல் வேண்டும்.

(ஈ) பதவிக்காலம் முடிவடைவதன்மேல் ஒரு பஸ்நாயக்க நிலமேயின் பதவியில் வெற்றிடமொன்று ஏற்படுமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, அத்தகைய சம்பவம் ஏற்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் அல்லது வெற்றிடமானது வேறேதேனும் காரணத்தின் விளைவாக ஏற்படுமிடத்து, அத்தகைய வெற்றிடம் ஏற்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவுறுவதற்கு முன்னர் அத்தகைய கூட்டத்தை நடாத்துதல் வேண்டும்."

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 8அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 8அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"பஸ்நாயக்க நிலமேயாக நியமிக்கப்பட்டவரான ஆளெவரும் அத்தகைய பதவியை வகித்துக் கொண்டிருக்கின்றபோது வேறொரு தேவாலயத்தின் பஸ்நாயக்க நிலமேயாகப் பதவியை வகித்தலாகாது.*

8அ. தேவாலயமொன்றின் பஸ்நாயக்க நிலமேயாக நியமிக்கப்பட்டவரான ஆளெவரும், பஸ்நாயக்க நிலமேயாக பதவியை வகித்துக் கொண்டிருக்கும்போது வேறொரு தேவாலயத்தின் பஸ்நாயக்க நிலமேயின் பதவியை வகித்தலாகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் ''மல்வத்த விஹாரையின் மற்றும் அஸ்கிரி விஹாரையின்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக "மல்வத்து மதப்பிரிவின் மற்றும் அஸ்கிரி மதப்பிரிவின்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு, அப்பிரிவுக்கான காப்புவாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

ஆயின், தியவதன நிலமேயின் பதவிக்காலப்பகுதி ஐந்தாண்டுகளுக்கானதாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், ஆளெவரும் மூன்று காலப்பகுதிகளுக்கு மேற்பட தியவதன நிலமே என்ற பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகவுடையவராதலுமாகாது:

ஆயின், மேலும், இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று தியவதன நிலமே என்ற பதவியை வகிக்கின்ற ஆளின் பதவிக்காலம், இரண்டாம் பதவிக்காலத்துக்காக அத்தகைய பதவிக்குரிய கடமைகளை ஏற்கின்ற தேதியிலிருந்து தொடங்குகின்ற பத்தாண்டுகளாகவிருத்தல் வேண்டும்.

*1981 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டத்தின் 3 ஆம் பிரிவை நீக்குதல்.*

**12.** ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பத்தோராமாண்டின் 18 ஆம் இலக்க, பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில் ''தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், சுருக்கமுறையிலான குற்றத்தீர்ப்பின்மேல் அத்தகைய ஒவ்வொரு மீறுகைக்கும் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் அத்தகைய ஒவ்வொரு மீறுகைக்கும் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**14**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:-

"(அ) ஒரு பிக்குவின் விடயத்தில் தவிர, அவர் ஐம்பது இலட்சம் ரூபாவுக்குக் குறையாத பெறுமதியைக் கொண்ட (அதன் மீதான ஏதேனும் ஈட்டுக் கடனுக்காக விட்டுக்கொடுத்ததன் பின்னர்) அசைவற்ற ஆதனத்தின் சொந்தக்காரராக அல்லது இரண்டு இலட்சம் ரூபாவுக்குக் குறையாத வருடாந்த திட்டவட்டமான வருமானத்தைப் பெறுபவராக இருந்தாலொழிய,";

(2) அதன் (ஆ) என்னும் பந்தியில் ''வேறு இழிவான குற்றச்செயலுக்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் சட்டத்தின் கீழான வேறு ஏதேனும் குற்றவியல் தவறுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**15**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில் "பகிரங்க நம்பிக்கைப்பொறுப்பாளர் தகுதிவாய்ந்தவராதல் வேண்டும்.'' என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"பகிரங்க நம்பிக்கைப்பொறுப்பாளர் தகுதிவாய்ந்தவராதல் வேண்டும் தியவதன நிலமே ஒருவர் இக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தமது தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதற்கு, நிறைவேற்றுவதற்கு அல்லது புரிவதற்குத் தவறுமிடத்து அல்லது புத்தசாசனத்துக்கு அல்லது தலதா மாளிகைக்கு அவமதிப்பு ஏற்படும் முறையில் செயலாற்றுமிடத்து, 7(2) ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரின் சம்மதத்துடன், ஆணையாளர் தலைமையதிபதியினால் நடாத்தப்பட்டவொரு விசாரணையின் பின்னர், அவர் தியவதன நிலமே என்ற பதவியிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவை அதன் (1) ஆம் உட்பிரிவை மீள இலக்கமிடுவதன் மூலமும்;

(2) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

''(2) ஓராம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட காரணங்களின் விளைவாக தியவதன நிலமேயின் பதவியில் வெற்றிடமொன்று ஏற்படுமிடத்து, மல்வத்து மற்றும் அஸ்கிரி மதப்பிரிவுகளின் மஹாநாயக்க தேரர்களினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரான கண்டி மாநகர சபை எல்லைகளினுள் அமைந்துள்ள சத்தர மஹா தேவாலயங்களின் பஸ்நாயக்க நிலமே ஒருவர் அத்தகைய தியவதன நிலமே என்ற பதவியில் செயலாற்றுவதற்கு நியமிக்கப்படுதல் வேண்டும்.''.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப் படுகின்றது:-

“வெற்றிடமொன்று ஏற்படும்போது ஒரு நம்பிக்கைப் பொறுப்பாளரின் தற்காலிக நியமனம்.

17. (1) நம்பிக்கைப்பொறுப்பாளரொருவர் பதவியை ஏற்பதற்கு மறுக்குமிடத்து, அல்லது எவரேனும் நம்பிக்கைப்பொறுப்பாளரின் இறப்பு, பதவி வறிதாக்குகை, இயலாமை, தகைமையீனம், பதவிவிலகுகை, இடைநிறுத்துகை, பதவிநீக்குகை அல்லது கடனிறுக்கவகையற்றமை என்பன காரணமாக வெற்றிடமொன்று ஏற்படுமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, அடுத்துறுபவ ரொருவர் நியமிக்கப்படும்வரை நம்பிக்கைப் பொறுப்பாளரின் பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்காகத் தற்காலிக நியமனமொன்றைச் செய்வதற்குத் தத்துவமுடையவராதல் வேண்டும்.

(2) (அ) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதி தற்காலிக நியமனமொன்றைச் செய்யுமிடத்தும் மற்றும் அத்தகைய நியமனம் ஒரு

தேவாலயத்துக்கானதாகவிருக்குமிடத்தும், அவர் வேறொரு தேவாலயத்தின் பஸ்நாயக்க நிலமேயை அல்லது ஒரு நம்பிக்கைப்பொறுப்பாளரை மட்டுமே நியமித்தல் வேண்டும். விஹாராதிபதி தேரரொருவர் நம்பிக்கைப்பொறுப்பாளர் என்ற பதவியை வகித்துள்ள ஒரு கோயிலில் வெற்றிடம் ஏற்படின், இயைபான கோயில் எந்த நிக்காயவுக்கு அல்லது மதப்பிரிவுக்கு சொந்தமானதோ அந்த நிக்காயவின் அல்லது மதப்பிரிவின் மஹாநாயக்க தேரரைக் கலந்தாலோசித்த பின்னர் தற்காலிக நம்பிக்கைப் பொறுப்பாளரொருவர் நியமிக்கப்படுதல் வேண்டும். மேலும், தற்காலிக நம்பிக்கைப் பொறுப்பாளர், அத்தகைய வெற்றிடம் ஏற்பட்டதிலிருந்து ஏழு நாட்களினுள் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) எவரேனும் தற்காலிக நம்பிக்கைப் பொறுப்பாளர் இக்கட்டளைச்சட்டத்தின் கீழான நம்பிக்கைப்பொறுப்பாளரொருவரின் எல்லாத் தத்துவங்களையும் உடையவராதல் வேண்டு மென்பதுடன், அத்தகைய ஆள் ஒரு நம்பிக்கைப் பொறுப்பாளரின் எல்லாத் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகித்தலும் புரிதலும் வேண்டும்.

(இ) இப்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட தற்காலிக நம்பிக்கைப்பொறுப்பாளரொருவர், ஆணையாளர் தலைமையதிபதியுடன் விதித்துரைக்கப்பட்ட பிணைப்பொறுப்பொன்றை வைப்பிலிடுதல் வேண்டும்.

(3) நம்பிக்கைப்பொறுப்பாளரொருவர் இலங்கையை விட்டுச் செல்லுமிடத்து, அத்தகைய நம்பிக்கைப்பொறுப்பாளரினால் எழுத்தில் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆளொருவர் அத்தகைய நம்பிக்கைப்பொறுப்பாளரின் இடத்தில் செயலாற்றுதல் வேண்டும். ஆயின், அத்தகைய பெயர்குறித்த நியமனமானது ஆணையாளர் தலைமையதிபதிக்கு அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பாளரினால் எழுத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(4) தியவதன நிலமேக்குப் பதிலாகச் செயலாற்றுவதற்கு ஆளொருவரின் தற்காலிக நியமனத்தின் அல்லது பெயர்குறித்த நியமனத்தின் விடயத்தில், அந்நியமனம் அல்லது பெயர்குறித்த நியமனம், மல்வத்த மற்றும் அஸ்கிரிய மதப்பிரிவுகளின் மஹாநாயக்க தேரர்களின் அங்கீகாரத்துக்கமைவானதாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**18**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19ஆம் பிரிவு, "நூறு ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**19**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 20அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"கோயில் ஆதனம் விஹாராதிபதிக்கு அல்லது கட்டுப் படுத்துகின்ற விஹாராதிபதிக்கு உரித்தாக்கப் படுதல்.

20அ. ஆயிரத்துத்தொளாயிரத்துப் பதினைந்தாம் ஆண்டின் ஆம் இலக்க, தேரவாத பிக்கு கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டத்தின் 10ஆம் பிரிவின் கீழான சங்க சபையின் செயற்குழுவினால் செய்யப்பட்ட முடிபுக்கு இணங்கியொழுகுவதற்கு மறுக்கின்ற அல்லது தவறுகின்ற எவரேனும் விஹாராதிபதி அல்லது கட்டுப்படுத்துகின்ற விஹாராதிபதி, அத்தகைய முடிபுசெய்யப்பட்ட தேதியிலிருந்து ஒருமாத காலப்பகுதியினுள் கோயில் ஆதனத்தை வறிதாக்குதல் வேண்டும். சங்க சபையின் செயற்குழு இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அதே நிக்காயவின் அல்லது மதப்பிரிவின் விடயத்துக்கேற்ப, வேறொரு விஹாராதிபதியை அல்லது கட்டுப்படுத்துகின்ற விஹாராதிபதியை நியமித்தல் வேண்டுமென்பதுடன், அக்கோயில் ஆதனம் எவ்வாறாயினும் அத்தகைய ஏதேனும் அசைவற்ற ஆதனத்தை ஏற்கனவே பாதிக்கின்றதான ஏதேனும் குத்தகை மற்றும் வேறு வாடகைக் குடியிருப்புக்கள், பொறுப்புக்கள் மற்றும் பாரிப்புக்களுக்கமைவாக, சங்க சபையின் செயற்குழுவினால் நியமிக்கப்பட்ட விஹாராதிபதிக்கு அல்லது கட்டுப்படுத்துகின்ற விஹாராதிபதிக்கு உரித்தாக்கப்படுதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**20**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது.

*"சொந்தப் பாவனைக்காகப் பிக்குவினால் கொள்ளப்பட்ட தனிப்பட்ட ஆதனம்*

23. எவரேனும் தனிப்பட்ட பிக்குவினால் அவரது புறநீங்கலான சொந்தப்பாவனைக்காகக் கொள்ளப்பட்ட அசைவுள்ள மற்றும் அசைவற்ற எல்லாத் தனிப்பட்ட ஆதனங்களும், அத்தகைய பிக்குவின் ஆயுட்காலத்தின்போது அவரினால் பராதீனப்படுத்தப்பட்டிராதிருப்பின் அல்லது அத்தகைய பிக்கு இக்கட்டளைச் சட்டத்தின் 20அ என்னும் பிரிவின்கீழ் கோயில் ஆதனத்தை வறிதாக்கியிருப்பின் அத்தகைய வறிதாக்குகைக்கு முன்னர், அத்தகைய ஆதனம் அடுத்துறுகை மூலம் அத்தகைய பிக்குவினால் மரபுரிமைவழியாகப் பெறப்பட்டிருந்தாலொழிய, அத்தகைய பிக்கு எந்தக் கோயிலில் வதிகின்றாரோ அந்தக் கோயிலின் ஆதனமாகவிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**21**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "நூறு ரூபாவை விஞ்சுகின்ற ஏதேனும் பணத்தொகையை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சுகின்ற ஏதேனும் பணத்தொகையை" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**22**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :-

*"பரவெனி ஆதனத்தின் உரிமைகளைக் கைமாற்றும்போது பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை.*

27. (1) எவரேனும் மரபுவழி வாடகைக் குடியிருப்பாளர் ஒரு பரவெனி ஆதனத்தின் எவையேனும் உரிமைகளைக் கைமாற்றுவதற்கு உட்கருதுமிடத்து, 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி அக்கோயில் நிருவகிக்கப்படின், நம்பிக்கைப்பொறுப்பாளருக்கான பிரதியுடன் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அல்லது அது வேறேதேனும் கோயிலாகவிருப்பின், விஹாராதிபதித் தேரருக்கான பிரதியுடன் அத்தகைய உட்கருத்தை அத்தகைய வாடகைக் குடியிருப்பாளர் அறிவித்தலும் மற்றும் ஆணையாளர் தலைமையதிபதியின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதலும் வேண்டும்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி, அதன் மேல் -

(அ) கைமாற்றப்படவேண்டிய உரிமைகள் ஒரு பரவெனி ஆதனத்தின் உரிமைகளாக அல்லது அதன் பாகமாக உள்ளதெனத் திருப்திப்படுவதன்மீது அங்கீகாரமளிக்க லாமென்பதுடன், இயைபான கோயிலின் நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு அத்தகைய அங்கீகாரத்தின் பிரதி யொன்றையும் அனுப்பலாம் ; அல்லது

(ஆ) அங்கீகாரத்தை மறுக்கலாமென்பதுடன், அத்தகைய மறுப்பை அதற்கான காரணங்களுடன் விண்ணப்ப காரருக்கு அறிவிக்கலாம்.

(3) ஆணையாளர் தலைமையதிபதி இப்பிரிவின்கீழ் அவரினால் வழங்கப்பட்ட அங்கீகாரங்களின் அல்லது அங்கீகார மறுத்தல்களின் இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

(4) ஆணையாளர் தலைமையதிபதியின் முடிபினால் இன்னலுறும் எவரேனும் மரபுவழி வாடகைக் குடியிருப்பாளர், அத்தகைய முடிபுசெய்யப்பட்டதிலிருந்து ஒரு மாதத்தினுள் அத்தகைய முடிபுக்கெதிராக, புத்த சாசனம் என்னும் விடயம் எந்த அமைச்சருக்கு குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(5) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட மரபுவழி வாடகைக் குடியிருப்பாளர் ஏதேனும் பரவெனி ஆதனத்திலுள்ள அவரது உரிமைகளைக் கைமாற்றுவதற்கு முன்னர் ஆணையாளர் தலைமையதிபதியின் அங்கீகாரத்தை பெறத்தவறுமிடத்து, அத்தகைய வாடகைக் குடியிருப்பாளர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது கொடுப்பனவில் தவணை தவறுப்படுமிடத்து, அத்தகைய தவணை தவறுகைக்குப் பதிலாக ஆறுமாதங்களை விஞ்சாத காலப்பகுதிக்கான மறியற் றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

(6) பரவெனி ஆதனத்தின் எவரேனும் மரபுவழி வாடகைக் குடியிருப்பாளரின் எவையேனும் உரிமைகளின் கைமாற்றத்துக்காக ஆணையாளர் தலைமையதிபதி அங்கீகாரம் வழங்குமிடத்து, அத்தகைய உரிமைகளின் மரபுவழி வாடகைக் குடியிருப்பாளர் கைமாற்றல் உறுதி நிறைவேற்றப்படுவதன் மேல், தகவலுக்காக ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கைமாற்றுதல், உறுதியின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றை அனுப்புதல் வேண்டுமென்பதுடன், ஆணையாளர் தலைமையதிபதி, அத்தகைய ஆதனத்தை நம்பிக்கைப் பொறுப்பில் வைத்திருக்கும் கோயிலின் நம்பிக்கைப்பொறுப்பாளருக்கு அதனை அறிவித்தலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 28அ என்னும் பிரிவு முதல் 28ஓ என்னும் பிரிவு வரையிலான பிரிவுகளை உட்புகுத்துதல்.*

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 28அ, 28ஆ, 28இ, 28ஈ, 28உ, 28ஊ, 28எ, 28ஏ, 28ஐ, 28ஒ மற்றும் 28ஓ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"*அதிகாரமளிக்கப்படாத உடைமையிலிருந்து அல்லது இருப்பாட்சியில் இருந்து கோயில் ஆதனத்தை மீட்டெடுத்தல்.*

28அ. (1) அதிகாரமளிக்கப்படாத இருப்பாட்சியில் அல்லது ஆட்சியில் உள்ள எவரேனுமாளிடமிருந்து ஏதேனும் கோயிலுக்குச் சொந்தமான அல்லது சொந்தமானதெனச் சார்த்தப்பட்ட கோயில் ஆதனத்தை மீட்டெடுப்பதற்காக அல்லது அத்தகைய ஏதேனும் ஆதனத்துக்கான உரித்தை நிலைநாட்டுவதற்காக ஏற்புடையற் பாலதான நடவடிக்கைமுறை இதன்கீழ் குறித்துரைக்கப்பட்ட முறையிலானதாதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், நம்பிக்கைப்பொறுப்பாளரினால் அல்லது விஹாராதிபதித் தேரரினால், அதிகாரமளிக்கப்படாத இருப்பாட்சியாளரை அல்லது உடைமையாளரை இயைபான ஆதனத்திலிருந்து அகற்றும்படி ஆணையாளர் தலைமையதிபதியைத் தேவைப்படுத்தி அவருக்கு வேண்டுகோளொன்று விடுவிக்கப்படுதல் வேண்டும் :

ஆயின், மேலும், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், பரவெனிப் பங்குக்கு மற்றும் (118 ஆம் அத்தியாய மான) சன்னாசுகள் மற்றும் பழைய உறுதிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் கையுதிர்க்கப்பட்ட ஆதனத்துக்கு ஏற்புடையற்பாலனவாதலாகாது.

(2) சான்றிதழொன்றிற் குறிப்பிடப்பட்ட ஆள் அதிகாரமளிக்கப்படாத உடைமையில் அல்லது இருப்பாட்சியில் உள்ளாரென்ற பொருள்பட ஆணையாளர் தலைமையதிபதியின் கைப்பட்ட அச்சான்றிதழ் அதில் கூறப்பட்ட நிகழ்விற்கான முதற்றோற்றச் சான்றாதல் வேண்டும்.

(3) ஏதேனும் கோயில் ஆதனம் எவரேனுமாளின் உடைமையில் அல்லது இருப்பாட்சியில் உள்ளமை, இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இருந்துள்ளதாகவும் மற்றும் இருப்பதாகவும் எல்லா நேரங்களிலும் கருதப்படுதல் வேண்டும்.

ஒரு வெளியேற்றல் அறிவித்தலுக்கு இணங்கி யொழுகு வதற்கான கடப்பாடு.

28ஆ. (1) (அ) எவரேனுமாள் ஏதேனும் கோயில் ஆதனத்தின் அதிகாரமளிக்கப்படாத உடைமையில் அல்லது இருப்பாட்சியில் உள்ளாரென ஆணை யாளர் தலைமையதிபதி அபிப்பிராயப்படுமிடத்து, அவரில் தங்கிவாழுநர்கள் எவரேனுமிருப்பின் அவர்களுடன் அத்தகைய ஆதனத்திலிருந்து வெளியேறும்படியும், குறித்துரைக்கப்பட்ட தேதி யன்று அல்லது அதற்கு முன்னர் (இதனகத்துப் பின்னர் "வெளியேற்றல் அறிவித்தல்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அறிவித்தலில் குறித் துரைக்கப்படக்கூடியவாறாக ஆணையாளர் தலைமையதிபதிக்கு அல்லது அவரினால் அதிகார மளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு அத்தகைய ஆதனத்தின் வெற்றான உடைமையை ஒப்படைக்கும் படியும் அத்தகைய ஆளைத் தேவைப்படுத்துகின்ற அவ்வறிவித்தலை அவர் அத்தகைய ஆளுக்குச் சேர்ப்பிக்கலாம்.

(ஆ) அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட வேண்டிய தேதி, அத்தகைய அறிவித்தல் வழங்கப் பட்ட அல்லது வெளிக்காட்டி வைக்கப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குக் குறையாத வொரு தேதியாகவிருத்தல் வேண்டும்.

(2) ஏதேனும் கோயில் ஆதனம் தொடர்பிலான ஒரு வெளியேற்றல் அறிவித்தல், அத்தகைய அறிவித்தல் பதிவஞ்சல்மூலம் அனுப்பப்படின் அல்லது அத்த கைய ஆதனத்தின் அல்லது அதன்மீது துலாம்பர மானவோரிடத்தில் வெளிக்காட்டிவைக்கப்படின் அதனை உடைமையில் அல்லது இருப்பாட்சியில் வைத்திருக்கின்ற ஆளுக்குச் சேர்ப்பிக்கப்பட்டுள்ள தாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) வெளியேற்றல் அறிவித்தல் ஒவ்வொன்றும் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவம் ‘அ’ இல் இருத்தல் வேண்டும்.

ஒரு வெளியேற்றல் அறிவித்தலுக்கு இணங்கி யொழுகாமையின் விளைவு.

28இ. ஒரு வெளியேற்றல் அறிவித்தல் 28ஆ என்னும் பிரிவின் கீழ் சேர்ப்பிக்கப்பட்டுள்ளவிடத்து அல்லது வெளிக்காட்டி வைக்கப்பட்டுள்ளவிடத்து–

(அ) அத்தகைய அறிவித்தல் ஆதனத்தை அதிகாரமளிக்கப்படாத உடைமையில் அல்லது இருப்பாட்சியில் வைத்திருக்கின்ற வரான எவ்வாள் தொடர்பானதோ அவ்வாள் அல்லது அத்தகைய ஆளின் எவரேனும் தங்கிவாழுநர், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் அத்தகைய காணியை உடைமையில் வைத் திருப்பதற்கு அல்லது இருப்பாட்சியில் வைத் திருப்பதற்கு உரித்துடையவராதலாகாது ; அத்துடன்

(ஆ) அதிகாரமளிக்கப்படாத உடைமையில் அல்லது இருப்பாட்சியில் உள்ள ஆள், அவரது தங்கிவாழுநர்கள், எவரேனுமிருப்பின், அவர்களுடன் அத்தகைய ஆதனத்தை முறையாக வறிதாக்குதல் வேண்டுமென்பதுடன், ஆணையாளர் தலைமையதிபதிக்கு அல்லது அவரினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்டு அத்தகைய அறிவித்தலில் பெயர் குறித்துரைக்கப்பட்ட எவரேனுமாளுக்கு அதன் வெற்றான உடைமையை ஒப்படைத்தலும் வேண்டும்.

காரணங் காட்டும்படி விண்ணப்பத்தில் பெயர் குறிப்பிடப்பட்ட ஆளுக்கு நீதிவான் அறிவித்தல் வழங்குதல்.

28ஈ. (1) ஏதேனும் கோயில் ஆதனத்தின் அதிகாரமளிக்கப்படாத உடைமையில் அல்லது இருப்பாட்சியில் உள்ள எவரேனுமாள், ஏதேனும் வெளியேற்றல் அறிவித்தல் தொடர்பில் பிரிவு 28இ (ஆ) இன் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, அத்தகைய ஆதனம் அல்லது அதன் ஏதேனும் பாகம் எந்த நீதிவான் நீதிமன்றத்தின் இடப்பிரதேச நியாயாதிக்கத்தினுள் அமைந்துள்ளதோ அந்த நீதிவான் நீதிமன்றத்துக்கு இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவம் ‘ஆ’ இல் விண்ணப்பமொன்றைச் செய்யலாம்:-

(அ) பின்வரும் கருமங்களை எடுத்துக்கூறியும்-

(i) இக்கட்டளைச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அவரே அதிகாரமளிக்கப்பட்ட ஆள் என்றும்;

(ii) விண்ணப்பத்திற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட ஆதனம் கோயில் ஆதனம் என்றும்;

(iii) அத்தகைய ஆதனத்தின் அதிகாரமளிக்கப்படாத உடைமையில் அல்லது இருப்பாட்சியில் இருந்த ஆளுக்கு ஒரு வெளியேற்றல் அறிவித்தல் பதிவஞ்சலில் சேர்க்கப்பட்டது அல்லது அத்தகைய ஆதனத்தில் அல்லது ஆதனத்தின் மீது துலாம்பரமானவோரிடத்தில் வெளிக்காட்டிவைக்கப்பட்டது என்றும்;

(iv) விண்ணப்பத்தில் பெயர் குறிப்பிடப்பட்ட அத்தகைய ஆள் அத்தகைய ஆதனத்தின் அதிகாரமளிக்கப்படாத உடைமையில் அல்லது இருப்பாட்சியில் உள்ளார் என்றும் அத்தகைய ஆதனம் தொடர்பான அத்தகைய அறிவித்தல் தொடர்பில் மேற்கூறப்பட்ட 28இ என்னும் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறியுள்ளார் என்றும்; அத்துடன்

(ஆ) அத்தகைய ஆதனத்தின் உடைமையை மீட்டெடுப்பதற்காகவும் அத்தகைய ஆதனத்திலிருந்து, அதிகாரமளிக்கப்படாத உடைமையில் அல்லது இருப்பாட்சியில் உள்ள அத்தகைய ஆளையும் மற்றும் அவரின் தங்கிவாழுநர்கள், எவரேனுமிருப்பின், அவர்களையும் வெளியகற்றுவதற்கான கட்டளையொன்றுக்காகவும் வேண்டிக் கேட்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான அத்தகைய ஒவ்வொரு விண்ணப்பமும், அத்தகைய விண்ணப்பத்தில் எடுத்துக்கூறப்பட்ட கருமங்களை உறுதிப்படுத்துகின்ற, இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவம் 'இ' இலான சத்தியக் கடுதாசியொன்றின் மூலம் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், வெளியேற்றல் அறிவித்தலின் பிரதியொன்றுடன் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும்.

(3) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் சத்தியக்கடுதாசியொன்றினால் ஆதாரப்படுத்தப்பட்டு வெளியேற்றல் அறிவித்தலின் பிரதியுடன் சேர்த்தனுப்பப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பமும் "வெளியகற்றுவதற்கான விண்ணப்பம்" ஒன்றெனக் குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

(4) வெளியகற்றுவதற்கான ஏதேனும் விண்ணப்பத்துக்காக முத்திரைத் தீர்வையெதுவும் செலுத்தப்படற்பாலதாதலாகாது.

காரணமெதுவும் காட்டப்படாத விடத்து வெளியகற்றுவதற்கான கட்டளை.

28உ. (1) பிரிவு 28ஈ என்பதன் கீழான விண்ணப்பமொன்று கிடைக்கப்பெற்றதன் மேல், நீதிவான் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட ஆளுக்கு, அழைப்பாணையொன்றில் குறித்துரைக்கப்பட்ட தேதியொன்றில் தோன்றி (இது அத்தகைய அழைப்பாணை வழங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டுவாரங்களுக்குப் பிந்தாதவொரு தேதியாக விருத்தல் வேண்டும்) அத்தகைய ஆளும் அவரது தங்கிவாழுநர்கள், எவருமிருப்பின், அவர்களும் விண்ணப்பத்தில் வேண்டிக்கேட்கப்பட்டவாறு ஆதனத்திலிருந்து ஏன் வெளியகற்றப்படலாகாதென்பதற்கான காரணத்தைக்காட்டும்படி உடனடியாக அத்தகைய அழைப்பாணையை வழங்குதல் வேண்டும்.

(2) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகள் (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அழைப்பாணையின் வழங்குகைக்கும் அதன் சேர்ப்பிப்புக்கும் மற்றும் அழைப்பாணை விட்டழைக்கப்பட்ட ஆளின் வருகையை உறுதிப் படுத்துவதற்கு அவசியமான ஏனைய நடவடிக்கைகளுக்கும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*காரணங் காட்டப்படின் விசாரணை.*

28ஊ. (1) பிரிவு 28உ என்பதன் கீழ் எவ்வாளுக்கு அழைப்பாணை சேர்ப்பிக்கப் பட்டதோ அவ்வாள் அத்தகைய அழைப்பாணையில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று தோன்றி வெளியகற்றுவதற்கான கட்டளையொன்று வழங்கப்படுவதற்கெதிராக தனக்குக் காட்டுவதற்குக் காரணமுண்டெனக் கூறுமிடத்து, நீதிவான் நீதிமன்றம், விடயத்தைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கு உடனடியாக நடவடிக்கையெடுக்கலாம் அல்லது பிந்தியவொரு தேதியில் வழக்கை விசாரணைக்காக நிர்ணயிக்கலாம்.

(2) வெளியகற்றுவதற்கான ஏதேனும் விண்ணப்பம் நீதிவான் நீதிமன்றத்திற்குச் செய்யப் பட்டுள்ளவிடத்து, நீதிவான், அத்தகைய வேறு அலுவல்களை முன்னரே தீர்மானிப்பதனைச் சூழ்நிலைகள் அவசியமாக்கும்போது தவிர, அத்தகைய விண்ணப்பத்தைக் கேட்டுத் தீர் மானிப்பதற்கென, அந்நீதிமன்றத்தின் வேறெல்லா அலுவல்களிலும் பார்க்க முன்னுரிமை கொடுத்தல் வேண்டும்.

வெளியகற்று வதற்கான கட்டளை.

28எ. விசாரணைக்குப் பின்னர், நீதிவான், காரணங்காட்டுகின்ற ஆள் ஆதனத்தின் உடைமைக்கு அல்லது இருப்பாட்சிக்கு உரித்துடையவரெனத் திருப்திப்படாதவிடத்து, அத்தகைய ஆதனத்தில் இருப்பாட்சிகொண்டுள்ள அத்தகைய ஆளையும் அவரது தங்கிவாழுநர்களையும் வெளிய கற்றும்படி பணிக்கின்ற கட்டளையை ஆக்குதல் வேண்டும்.

வெளியகற்று வதற்கான கட்டளையை நிறைவேற்றுதல்.

28ஏ. (1) பிரிவு 28எ என்பதன்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுக்கு எவரேனுமாள் இணங்கியொழுகத் தவறுமிடத்து, நீதிவான், ஆணையாளர் தலைமையதிபதியின் விண்ணப்பத்தின்மேல் அக் கட்டளையினால் பிணிக்கப்பட்ட எல்லா ஆட்களையும் ஆதனத்திலிருந்து வெளியகற்றும்படியும் ஆணையாளர் தலைமையதிபதியிடம் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியிடம் அத்தகைய ஆதனத்தின் உடைமையை ஒப்படைக்கும்படியும் பிசுக்காலை அல்லது பொலிசு அலுவலரொருவரைப் பணித்தல் வேண்டும்.

(2) வெளியகற்றுவதற்கான கட்டளையை நிறைவேற்றும்படி பொறுப்பிக்கப்பட்ட பிசுக்கால் அல்லது பொலிசு அலுவலர் நீதிவான் நீதிமன்றத்தின் பணிப்புக்கு இணங்கியொழுகுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அலுவலர் அத்தகைய கட்டளையை எந்த முறையில் நிறைவேற்றினாரென்பது பற்றி நீதிமன்றுக்கு முறையாக அறிவித்தலும் வேண்டும்.

(3) வெளியகற்றுவதற்கான கட்டளையொன்றை நிறைவேற்றுவதில் பிசுக்கால் அல்லது பொலிசு அலுவலர் அல்லது பிசுக்கால் அல்லது பொலிசு அலுவலரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், ஆதனத்தினுள் பிரவேசிப்பதற்கும் கட்டளையினாற் பிணிக்கப்பட்ட எவரேனுமாளை வெளியகற்றுவதற்கும் நீதிவான் நீதிமன்றத்தின் பணிப்புக்கிணங்கக் காணியின் உடைமையை ஒப்படைப்பதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வலோத்காரத்தைப் பயன்படுத்தலாம்.

*ஆணையாளர் தலைமையதிபதிக் கெதிராக உரித்தை நிலைநாட்டு வதற்கான வழக்கு பேணப்படலாம்.*

*28ஐ.* இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், இவ்வேற்பாடுகளின் கீழ் ஓர் ஆதனத்திலிருந்து வெளியகற்றப்பட்டுள்ள எவரேனுமாள் அல்லது அதன் சொந்தக்காரராகவுள்ளாரென உரிமை கோருகின்ற எவரேனுமாள், வெளியகற்றுவதற்கான கட்டளைத் தேதியிலிருந்து ஆறுமாத காலப் பகுதியினுள் அதற்கான அவரது உரிமையை நிலைநாட்டுவதற்காக ஆணையாளர் தலைமையதிபதிக்கெதிராக அல்லது அவர் சார்பில் செயலாற்றுகின்ற வேறெவரேனுமாளுக்கெதிராக வழக்கொன்றைத் தொடுப்பதனைத் தடைசெய்தலாகாது.

*நட்டஈடு.*

*28ஒ.* ஏதேனும் ஆதனத்துக்கான உரித்தை நிலைநாட்டுவதற்கு ஆணையாளர் தலைமையதிபதிக்கெதிராக எவரேனுமாளினால் 28ஒ என்னும் பிரிவின்கீழ் தொடுக்கப்பட்ட வழக்கொன்று அத்தகைய ஆளின் சார்பாக முடிபு செய்யப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய ஆள், அத்தகைய ஆதனத்தின் உடைமையை ஒப்படைப்பதற்கு அவர் வலுக்கட்டாயப்படுத்தப்பட்டமை காரணமாக உறப்பட்ட சேதத்துக்காக நியாயமான நட்டஈடொன்றை அறவிடுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

*கோயில் ஆதனத்தை மீட்டெடுத்தல் தொடர்பான ஏற்பாடுகள் ஏனைய சட்டங்களிலும் மேலோங்கி நிற்றல்.*

*28ஓ.* ஏதேனும் கோயிலுக்குச் சொந்தமான ஆதனத்தை மீட்டெடுத்தல் தொடர்பான இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் அடங்கியுள்ளது எது எவ்வாறிருப்பினும், பயனுடையனவாதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அத்தகைய வேறு சட்டத்திற்குமிடையே ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில், இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) ஓராம் உட்பிரிவில், "ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத பெறுமதியினவான அல்லது பரப்பளவில் ஐந்து ஏக்கர்களுக்கு மேற்படாதனவான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்து இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத பெறுமதியினவான அல்லது பரப்பளவில் ஓர் ஏக்கருக்கு மேற்படாதனவான" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(3) குத்தகை எதுவும் முப்பதாண்டுகளை விஞ்சுகின்றவொரு காலப்பகுதிக்காக நிறைவேற்றப்படுதலாகாது என்பதுடன், குத்தகை உடன்படிக்கைத் தேதியிலிருந்து ஒவ்வோர் ஐந்தாண்டுகள் பூர்த்தி செய்யப்படுவதன்மேல் வாடகையின் மீளாய்வுக்காக குத்தகை ஒவ்வொன்றிலும் பொருத்தனையொன்று உட்புகுத்தப்படுதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவு, அதன் (4) ஆம் உட்பிரிவில் "தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், சுருக்க முறையிலான குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் இருநூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரினாலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதுடன் மேல் இருபதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**26.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவு, அதன் (3) ஆம் உட்பிரிவில் "தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், சுருக்கமுறையில் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் இருநூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரினாலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதுடன் மேல் இருபதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்க்தின் 37 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**27.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "இருநூறு ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இருபதினாயிரம் ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 40ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**28.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவு, அப்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"கட்டளைச் சட்டத்தின் கீழான தத்துவங்களைப் பிரயோகிக்கும் போது பொதுவான தகைமை.

40. ஆளெவரும், உளதாயிருக்கின்ற தேரவாத பௌத்தமதத்தின் ஒழுக்கத்துக்கும் வழக்காறுகளுக்குமிணங்க நியமிக்கப்பட்ட பௌத்த மதத்தவராகவும் பதினெட்டு வயதைப் பூர்த்தி செய்துள்ளவராகவும் இருந்தாலொழிய, அட்டமஸ்தானக் குழுவின் உறுப்பினரொருவராகவிருப்பதற்கு அல்லது பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்கு அல்லது ஒரு கோயிலின் நம்பிக்கைப் பொறுப்பாளராக இருப்பதற்கு அல்லது உறுப்பினராக இருப்பதற்கு தகவுடையவராதலாகாது :

ஆயின், எவ்வாறாயினும், பதினெட்டு வயதைப் பூர்த்திசெய்துள்ள பௌத்த மதத்தினராகவுள்ள ஆளொருவர், ஒரு கோயிலுக்கு நம்பிக்கைப்பொறுப்பாளரொருவரின் தேர்தலில் அவரது அல்லது அவளது வாக்கைப் பிரயோகிப்பதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**29**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(அ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "அத்தகைய மதக்குருத்துவம் அளிக்கப்பட்டதிலிருந்து அல்லது மதம்சார் ஆடை அணிவிக்கப்பட்டதிலிருந்து ஒரு மாதத்தினுள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய மதக்குருத்துவம் அளிக்கப்பட்டதிலிருந்து அல்லது மதம்சார் ஆடை அணிவிக்கப்பட்டதிலிருந்து மூன்று மாதங்களினுள்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(7) இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது அவற்றுக்கு முரணாகச் செயலாற்றுகின்ற ஒவ்வோர் உபசம்பத பிக்குவும், விஹாராதிபதியும் அல்லது மதம்சார் ஆடை அணிவிக்கும் போதனையாளரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரினாலான சுருக்க முறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**30.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவு "ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**31.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்திகளை உட்புகுத்துவதன்மூலமும் :-

"(ஊஅ) இக்கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுவதற்கான நியமனக் கடிதப்படிவத்தை விதித்துரைக்கின்ற ;

(ஊஆ) இக்கட்டளைச் சட்டத்தின் 14 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் தகைமையீனங்களுக்கு நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் அமைந்தவர்கள் அல்லரெனக் கூறி அவர்களினால் அளிக்கப்படவேண்டிய ஒரு வெளிப்படுத்துகையை விதித்துரைக்கின்ற ;

(ஊஇ) நம்பிக்கைப்பொறுப்பாளர்களினால் கொடுக்கப்படவேண்டிய பிணைப்பொறுப்புத் தொகையையும் அத்தகைய பிணைப்பொறுப்பை வைப்பிலிடுவதற்கான முறையையும் விதித்துரைக்கின்ற ;

(ஊஈ) பரவெனி ஆதனத்தின் அல்லது அத்தகைய ஆதனத்தின் ஒரு பங்கின் வாடகைக் குடியிருப்பாளரினால் புரியப்பட வேண்டிய கடமைகள் தொடர்பாகப் பேணப்பட வேண்டிய ஆவணங்களை விதித்துரைக்கின்ற ; அத்துடன்

(ஊஉ) அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவங்களில் செய்யப்படவேண்டிய திருத்தங்களை விதித்துரைக்கின்ற ;".

(2) அப்பிரிவின் (எ) என்னும் பந்தியை நீக்கிவிடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும் :-

"(2) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்கு விதியிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் அது வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு விரைவாகப் பாராளுமன்றத்தின் முன்னர் அதன் அங்கீகாரத் துக்காகக் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப் படாத ஏதேனும் ஒழுங்குவிதி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி எத்தேதியன்று ஒழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுகின்றதோ, அத்தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 43அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்தல்.*

**32.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப் படுகின்றதுடன், அப்பிரிவான முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 43அ என்றவாறு பயனுறுதலும் வேண்டும் :-

"*43ஆம் பிரிவின் கீழான தவறுகள்.*

43அ. 43 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியுடன் இணங்கி யொழுகத் தவறுகின்றவரான அல்லது அதனை

மீறுகின்றவரான எவரேனும் ஆள், தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும். குற்றத்தீர்ப்பளிப்பின் பின்னர் அத்தகைய ஆள் தொடர்ந்தும் அத்தவறைப் புரிகின்றவிடத்து, அவர் அவ்வாறு அத்தகைய தவறு தொடர்ந்து புரியப்படும் நாள் ஒவ்வொன்றிற்கும் ஐந்நூறு ரூபா குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.".

**33.** இச்சட்டத்தில் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**அட்டவணை** (பிரிவு 28ஆ)

*படிவம் 'அ'*

**வெளியேற்றல் அறிவித்தல்**

பௌத்த அறநிலையங்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் கோயில் ஆதனத்தை மீட்டெடுக்கும் நோக்கங்களுக்காக ........................... ஆகிய நான் (புத்த சாசன ஆணையாளர் தலைமையதிபதியின் அல்லது எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயரைக் குறிப்பிடுக) இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட கோயில் ஆதனத்தின் அதிகாரமளிக்கப்படாத உடைமையை / இருப்பாட்சியை ............................... ஆகிய நீர் (பெயரைக் குறிப்பிடுக) கொண்டுள்ளீரென அபிப்பிராயப்படுவதனால், அக்கட்டளைச் சட்டத்தின் 28ஆ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு ..............................* ஆகிய உம்மை (பெயரைக் குறிப்பிடுக) பின்வருமாறு செய்யும்படி தேவைப்படுத்துகின்றேன் :-

(அ) இதன் தேதியிலிருந்து ............................ நாட்களினுள் உமது தங்கிவாழுநர்கள் எவரேனுமிருப்பின், அவர்களுடன் அத்தகைய ஆதனத்தை வறிதாக்கும்படியும் ; அத்துடன்

(ஆ) ............................ ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் (தேதியைக் குறிப்பிடுக) அத்தகைய ஆதனத்தின் வெற்றான உடைமையை என்னிடம் */ அக்கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தகுதிவாய்ந்த அதிகாரியொருவரிடம் அல்லது ............................ (அதிகாரமளிக்கப்பட்ட ஆள் எவரேனுமிருப்பின், அவரின் பெயரையும் விவரணத்தையும் குறிப்பிடுக) என்பவரிடம் ஒப்படைக்கும்படியும்.

..............................................

ஆணையாளர் தலைமையதிபதியின் அல்லது
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்.

மேலே குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை :

(மாவட்டத்தின் பெயருட்பட அமைவிடத்தைக் குறிப்பிட்டு இங்கு ஆதனத்தை விவரிக்க)

..........................................

ஆணையாளர் தலைமையதிபதியின்

கையொப்பம்.

தேதி :................................

* பொருத்தமில்லாவிடின் விட்டுவிடுக.

**அட்டவணை** (பிரிவு 28ஈ)

படிவம் 'ஆ'

**வெளியகற்றுவதற்கான விண்ணப்பம்**

............................................... நீதிவான் நீதிமன்றத்துக்கு.

(அத்தகைய நீதிமன்றத்தின் பெயரைக் குறிப்பிடுக)

பௌத்த அறநிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக ஆணையாளர் தலைமையதிபதி ........................ (பெயரைக் குறிப்பிடுக) ஆகிய நான் அக்கட்டளைச் சட்டத்தின் 28ஈ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, இவ்விண்ணப்பத்தின் மூலம் –

(அ) பின்வரும் கருமங்களை எடுத்துக்கூறுகின்றேன் அதாவது:-

(i) நான் அத்தகைய தகுதிவாய்ந்த அதிகாரியாக வுள்ளேன் என்றும் ;

(ii) இவ்விண்ணபத்துக்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட ஆதனம் கோயிலுக்குச் சொந்த மான ஆதனமாகவுள்ளது என்றும் ;

(iii) வெளியேற்றல் அறிவித்தலொன்று (அதன் பிரதி யொன்று இவ்விண்ணப்பத்துடன் இணைக்கப் பட்டுள்ளது) ........................ (பெயரையும் முகவரியையும் குறிப்பிடுக) என்பவருக்கு சேர்ப் பிக்கப்பட்டது */ சொல்லப்பட்ட ஆதனத்தில் அல்லது அதன்மீது வெளிக்காட்டி வைக்கப்பட்டது என்றும் ;

(iv) சொல்லப்பட்ட ........................ (பெயரைக் குறிப்பிடுக) என்பவர் சொல்லப்பட்ட காணியின் அதிகாரமளிக்கப்படாத உடைமையை */ இருப்பாட்சியைக் கொண்டுள்ளதுடன் அக்கட் டளைச் சட்டத்தின் 28ஈ (ஆ) என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறியுள்ளார் என்றும் ;

(ஆ) சொல்லப்பட்ட ஆதனத்தின் உடைமையை மீட்டெடுப்பதற்காகவும் சொல்லப்பட்ட .................. (பெயரைக் குறிப்பிடுக) என்பவரையும் அவரது தங்கிவாழுநர்கள் எவரேனுமிருப்பின், அவர்களையும் வெளியகற்றுவதற்காகவும் வேண்டிக்கேட்கின்றேன்.

....................................................

*ஆணையாளர் தலைமையதிபதியின் அல்லது*
*அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்.*

மேலே குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை :

(மாவட்டம் உட்பட அமைவிடத்தைக் குறிப்பிட்டு இங்கு ஆதனத்தை விவரிக்கவும்)

.....................................................

*ஆணையாளர் தலைமையதிபதியின் அல்லது*
*அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்.*

தேதி :.................................

* பொருத்தமில்லாவிடின் விட்டுவிடுக.

*படிவம் 'இ'* *(பிரிவு 28ஈ)*

**சத்தியக்கடுதாசி**

.................................... நீதிவான் நீதிமன்றத்துக்கு.

(அத்தகைய நீதிமன்றத்தின் பெயரைக் குறிப்பிடுக)

....................... ஆகிய நான் (பெயரையும், பதவிப்பெயர் ஏதேனும் இருப்பின் அதனையும் குறிப்பிடுக) பௌத்த அறநிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் 28ஈ என்னும் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு இத்தால் பயபக்தியாகவும், நேர்மையாகவும், உண்மையாகவும் பின்வருமாறு வெளிப்படுத்தி உறுதிப்படுத்துகின்றேன் */சத்தியஞ் செய்து கூறுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் நோக்கங்களுக்காக நான் ஒரு தகுதிவாய்ந்த அதிகாரியாகவுள்ளேனென்றும் ;

(ii) வெளியகற்றுவதற்கான விண்ணப்பத்திற்கான அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனம் கோயில் ஆதனமாகவுள்ளதென்றும் ;

(iii) வெளியேற்றல் அறிவித்தலொன்று (அதன் பிரதியொன்று வெளியகற்றுவதற்கான விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளது) ....................... (பெயரையும் முகவரியையும் குறிப்பிடுக) என்பவருக்கு சேர்ப்பிக்கப்பட்டது /சொல்லப்பட்ட ஆதனத்தில் அல்லது அதன்மீது வெளிக்காட்டி வைக்கப்பட்டதென்றும் ;

(iv) சொல்லப்பட்ட.................. (பெயரைக் கூறுக) என்பவர் சொல்லப்பட்ட ஆதனத்தின் அதிகாரமளிக்கப்படாத உடைமையை */இருப்பாட்சியைக் கொண்டுள்ளாரென்றும் அக்கட்டளைச் சட்டத்தின் 28இ (ஆ) என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறியுள்ளாரென்றும்.

........................................................

வெளிப்படுத்துபவரின் கையொப்பமும் பதவிப்

பெயர் ஏதேனுமிருப்பின் அதுவும்.

வெளிப்படுத்துபவரினால்

20..... ஆம் ஆண்டு ......... மாதம்

........ஆந்நாளாகிய இன்று என் முன்னால்

உறுதிப்படுத்தப்பட்டது */

சத்தியஞ்செய்யப்பட்டது.

.........................................

உறுதியுரையை அல்லது சத்தியத்தை

எடுத்தோதுகின்ற ஆளின் கையொப்பமும்,

பதவிப் பெயர் ஏதேனுமிருப்பின், அதுவும்.

* பொருத்தமில்லாவிடின் விட்டுவிடுக.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்